விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

494—

வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஐ.சி.டி.எஸ். திட்டத்தை அமுல்படுத்துதல்

*10282—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் ஐ.சி.டி.எஸ். திட்டம் அமுல்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நிலக்கோட்டை தொகுதி வத்தலகுண்டு ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் Tamil Nadu Integrated Nutritious Project ( TINP ) இயங்கி வருவதால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் Integrated Child Development Services Scheme ( ICDSS ) அமுல்படுத்தும் செயற்குறிப்புக்கு இப்போதைக்கு அவசியம் இல்லை.

497—

இராஜபாளையம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்

*10854—திரு. தி. சாத்தையா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராஜர் மாவட்டம், இராஜபாளையம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?